**கலேவல பிரதேச சபை - 2023**

**-------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------------

கலேவல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்குகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, கலேவல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 அன்று நிதிக்கூற்றுக்களிலில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே

விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
  - ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்
  - தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
  - வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 <u>நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்</u>

### 1.6.1 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அன்று ஆவணங்கள் பிரகாரம் 2 கடன் கொடுத்தோர்களின் ஆரம்ப கடன் மீதி ரூபா. 1,167,665 ஆக இருந்த போதிலும் அது ரூபா. 835,272 என ரூபா. 332,393 குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் நிமதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும் | சரியான முறையில் பதிவு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கடைசி நாளில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 05 கணக்குகள் தொடர்பான நிலுவைகளை, தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது ரூபா. 40,857,666 விலகல் காணப்பட்டது . | தொடர்புடைய பயன்பாட்டு ஆவணங்களை சரியான முறையில் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | கணக்கு நிலுவைகள் சரி செய்யப்பட வேண்டும். |

## 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 132(ஏ) இன் பொருப்பான அமைச்சரின் முன் அனுமதியின்றி மீளாய்வாண்டில் கலேவெல பிரதேசத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 3,012,985 செலவிடப்பட்டுள்ளது. | இது ஆளுநரின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ளது | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 1.6.4 <u>கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 23,495,764 கூட்டுப்பெறுமதியான 02 சொத்து விடயங்கள் தொடர்பாகவும், மொத்தம் ரூபா. 19,573414 பெறுமதியான 02 கடன் நிலுவைகள் தொடர்பான ஆவணங்கள், கோப்புகள் மற்றும் உப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | தொடர்புடைய குறித்த தகவல்கள் கண்டறியப்பட்டு அவற்றை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | கணக்கு மீதிகள் அட்டவணைகள், ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ)1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| (i) உறுப்புரை 81, 85 மற்றும் 92 | (i ) பேலியகந்த சியாம்பலா ஏரி வனப்பிரதேசத்தின் சதுப்பு நிலத்தை ஒரு தரப்பினர் மண் இட்டு நிரப்பியமை மற்றும் சட்டவிரோத நிர்மாணங்கள் காரணமாக குளத்திற்கு நீர் செல்லும் இயற்கை நீர் வழித்தடம் தடைப்பட்டிருந்ததோடு, குறித்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட கழிவறை காரணமாக மலக் கழிவுகள் நீரில் கலக்கும் வாய்ப்பு காணப்பட்டது | பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | சட்டத்தின் விதிகளின் படி செயற்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 93 முதல் 95 வரையான உறுப்புரைகள் | கலேவல பிரதேச சபையினால் மலசலக் கழிவகற்றல் வாகனச் சேவையொன்று முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை | மலசலக் கழிவகற்றல் வாகனச் சேவையொன்று நடாத்திச் செல்லப்படுவதில்லை என்பதோடு மலசலக் கழிவுகளை கொட்டுவதற்கு பொருத்தமான இடமும் இல்லை | சட்டத்தின் விதிகளின்படி செயற்பட வேண்டும் |
| (ஆ) | 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 30 ( 1 ) மற்றும் ( 2 ) | 2018 முதல் 2021 ஆண்டுகளுக்கு இடையில் வழங்கப்பட்ட 246 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களுக்கான செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | . உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக பரிசோதனைகளை மேற்கொள்வதில் அசௌகரியங்கள் காணப்படுகின்ற நிலையில் சுமார் 5 வருடங்களுக்குட்பட்ட நிர்மானங்களின் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக | சட்டத்தின் விதிகளின்படி செயற்பட வேண்டும் |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XII அத்தியாயத்தின் உறுப்புரை 1.2 மற்றும் 1.3 | மீளாய்வாண்டில் 15 உததியோகத்தர்கள் விடுமுறைக்கான அனுமதி பெறாது 303 நாட்கள் கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை . | விடுமுறை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் விடுமுறை பெறுவதற்கு முன் அந்த விடுமுறைக்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | தாபனவிதிக் கோவையின் சட்ட விதிகளின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

**(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 104 | 2021 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகளின்படி இணங் காணப்பட்ட 09 GI குழாய்களின் குறைபாடு தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை | குறைபாடுள்ள GI குழாய்களினை ஒப்படைப்பதாக சேமிப்பகப் பொறுப்பாளர் அறிவித்துள்ள நிலையில் அவ்வாறில்லாவிடத்து நட்டம் அறவீடு செய்யப்படும். | நிதிப் பிரமாணப் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | சபைக்கு சொந்தமான 19 வாகனங்களின் 01 முதல் 07 மாதங்கள் வரையான காலப்பகுதிக்குறிய தினசரி ஓட்டுநர் பதிவுகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிப்பதற்குறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும் |

**(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ம் திகதியுடைய 09/2009 ம் இலக்க சுற்றிக்கை | அதிகாரிகள் வருகை , புறப்பாடு ஆகியவற்றை பதிவு செய்வதற்காக கைரேகை இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை . | இயந்திரம் பழுதடைந்துள்ளதால், அதை சரி செய்ய அல்லது புதிய இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஊ)** 2017 திசெம்பர் 21 ம் திகதியுடைய 02/2017 ம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | 2009 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட உழவு இயந்திரம் சபைக்கு கையகப்படுத்தப்படவில்லை. | கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைப் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 02. <u>நிதி மீளாய்வு</u>

## 2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,404,939 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,080,579 ஆக காணப்பட்டது.

### 2.2 <u>வருமான நிர்வாகம்</u>

### 2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). வீதவரியும் வரியும் | 2,000,000 | 1,927,067 | 2,268,194 | 920,224 | 2,000,000 | 1,916,325 | 1,260,764 | 1,261,351 |
| (ii). வாடகை | 4,881,000 | 4,647,488 | 4,640,418 | 135,174 | 5,750,000 | 4,822,163 | 4,651,138 | 128,103 |
| (iii). அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,450,000 | 5,141,032 | 5,913,402 | - | 4,250,000 | 4,390,625 | 4,309,625 | 772,370 |
| (iv). ஏனைய வருமானம் | 46,866,000 | 28,611,276 | 18,112,597 | 22,097,163 | 41,890,000 | 29,979,382 | 25,449,885 | 11,598,483 |
| மொத்தம் | 58,197,000 | 40,326,863 | 30,934,611 | 23,152,561 | 53,890,000 | 41,108,495 | 35,671,412 | 13,760,307 |

2.2.2 **வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| (i) 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீடு தொடர்பான சட்டமூலத்தை கவனத்திற் கொள்ளாது 2011 ற்கான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் வரியும் வீத வரியும் அறவிடப்பட்டிருந்தது. | சொத்துகளை மதிப்பீடு செய்தல் மற்றும் வீதவரி என்பன திருத்தப்படும் | சட்டத்தின் விதிகளின்படி செயற்பட வேண்டும் |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அன்று அறவிடப்பட வேண்டிய வீதவரி பாக்கி ரூபா. 920,223 என்பதோடு அதில் 67 அலகுகளிடமிருந்து அறவிடப்படவேண்டிய நிலுவையான ரூபா. 526, 506 பெறுமதி 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவைத் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வரி நிலுவை ரூபா. 85,440 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை . | மேற்படி | மேற்படி |

.

**(ஆ) ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| (i) சபைக் கட்டிட வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 40 கிலோவாட் சூரிய மின் கட்டமைப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அலகுகளை மின்சார சபைக்கு வழங்கியதன் மூலம் பெறப்பட வேண்டிய ரூபா. 109,377 மீளாய்வாண்டின் இறுதியில் அறவீடுசெய்யப்பட்டிருக்கவில்லை | மேற்படி | மேற்படி |
| (ii) சபை அதிகார வரம்பிற்குட்பட்ட பிரதேசத்தில் விளம்பரப் பலகைகளின் மாதிரி ஆய்வின் பிரகாரம், 48 வணிக நிறுவனங்களின் 50 விளம்பர பலகைகள் ஆண்டு கணக்கெடுப்பின் போது அடையாளம் காணப்படாமை காரணமாக, விளம்பர பலகை வருமானத்தில் ரூபா. 113,500 வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கெடுப்பொன்றை நடாத்தி வருமானம் வசூலிக்கப்படும். | வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிர்வாக ஒழுங்கீனம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 22ம் உறுப்புரைப் பிரகாரம், பொது மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 03 ஏக்கர் 01 ரூட் 06 பேர்ச் அளவினைக் கொண்ட 09 காணித் துண்டுகள் பொது மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாது காணப்பட்டதோடு சில நிலங்கள் சட்டவிரோத குடியிருப்பாளர்களின் பயன்பாட்டில் காணப்பட்டன. | பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | சம்பந்தப்பட்ட நிலத்தை பொது மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக பயன்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான 05 வாகனங்கள் விபத்துக்குள்ளாகி 03 ½ தொடக்கம் 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும், நிதிப் பிரமாணம் 104(4) ன் பிரகாரம் விசாரணை நடாத்தப்பட்டு இழப்புக்கள் மற்றும் பொறுப்பான தரப்பினர் கண்டறியப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணத்திற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (இ) | கடந்த ஆண்டு, டிஜிட்டல் முறையில் நூலகத்தை செயற்படுத்துவதற்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் ( ICTA) கணினிகள் உட்பட 22 வகையான 167 உபகரணங்கள் கலேவெல பொது நூலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2022 நவம்பர் 26 அன்று டிஜிட்டல் நூலகத்தை நிறுவுவதற்காக, 2022 ஜூன் 28 அன்று 2000 டிஜிட்டல் கார்பெடுகள் பெறப்பட்டாலும், மீளாய்வாண்டின் இறுதிதினம் வரை இயங்குநிலை உறுப்பினர்களான 1667 நபர்களுக்கான டிஜிட்டல் அட்டைகள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக இத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் எட்டப்படவில்லை | அனைத்து நூலக அங்கத்தவ உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கான ஏறபாடுகள் மேற்கொள்ளப்படும். | திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்ககளை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டத்திற்காக சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காணியின் மத்தியினூடாக சபையின் அனுமதியுடனோ அல்லது அனுமதியின்றியோ வெளி | அதை சரி செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.. | கடைகளை நவீனமயப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினரால் சட்டவிரோதமாக பாதையொன்று நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட போதிலும் அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | |
| (உ) | மொத்த விற்பனைக் கட்டிட வளாகத்திலுள்ள 09 கடைகளில் 07 கடைகள் பழுதுபார்க்கப்படாமல் குறைந்த வசதிகளுடன் வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 02 கடைகள் மூடப்பட்டிருந்தன. இந்த வளாகத்தையும் அதனுடன் தொடர்பான கட்டிடங்களையும் நவீனமயமாக்கி சபைக்கு அதிக வருமானம் பெறுவதில் கவனம் செலுத்தப்படவில்லை | கடைகளை இடித்து மீள் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | கடைகளை நவீனமயப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் |
| (ஊ) | மொத்த விற்பனை வளாகத்தின் கீழ் தளத்தில் உள்ள 15 ஆம் இலக்கக் கடை அறையின் நிர்மாணானங்கள் அனைத்தும் இடிந்து விரிசல் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் வியாபாரிகளின் உடமைகளுக்கும், உயிருக்கும் ஆபத்து ஏற்படும் வகையில் காணப்படுகின்றன | கடைகளை இடித்து மீள் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | ஆபத்தான கடைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 131 இன் அடிப்படையில் பிரதேச சபையின் நிதியில் குறிப்பிட்ட தொகையினை முதலீடு செய்ய முடியும் என்ற நிலையில்,மீளாய்வாண்டின் 12 மாதங்களில், மக்கள் வங்கியின் | ஸ்வீப் அமைப்பின் கீழ் முதலீடு செய்யப்படுகின்றது | சட்டத்தின் விதிகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கலேவெல கிளையின் நடைமுறைக் கணக்கில் ரூபா. 1,181,034 முதல் ரூபா. 19,208,910 வரையான இருப்பு காணப்பட்ட போதிலும், அந்த பணத்தை முதலீடு செய்யவோ, பிரதேச அபிவிருத்திக்கென பயன்படுத்தவோ எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை | | |
| (ஆ) | ஒரு லொறியின் சாரதி, நாளாந்த ஓட்டக் குறிப்புகளை, உண்மையான ஓட்டக் கிலோமீட்டரைத் தாண்டி, தவறாக எழுதி, பட்டியல்களை சமர்ப்பித்து, 120.47 லீட்டர் கூடுதலாக எரிபொருளைப் பெற்றதால், சபை நிதியத்திற்கு ரூபா .42,960 இழப்பு ஏற்பட்டது. | நிதிப் பிரமாணம் 104(3) ன் பிரகாரம் விசாரணை நடாத்தி மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | நட்டத்தை வசூலித்து ஒழுங்குமுறைப்படி செயற்பட வேண்டும் |

## 3.3 விளைவற்ற அல்லது பயன்படுத்தப்படாத ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூ.2,300,000 மதிப்புள்ள 02 வாகனங்கள் 02 முதல் 04 ஆண்டுகள் வரை செயலற்ற நிலையில் காணப்பட்டன. | பழுதுபார்ப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன | சொத்துக்களை பழுதுபார்த்து பயன்படுத்த வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 25 காணிகள் , 27 கட்டிடங்கள் , 59 மயானங்களின் உரிமை கையகப்படுத்தப்படவில்லை . | நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான மாதிபொல மற்றும் பிஹில்லயாவில் அமைந்துள்ள 0.1994 ஹெக்டயார் காணி மற்றும் தோலம்புகொல்லையில் உள்ள் அளவு குறிப்பிடப்படாத காணி என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை . | அடுத்த கணக்கியல் ஆண்டின் நிமதிக் கூற்றுக்களில் அது சரி செய்யப்படும் | சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கில் வைக்கப்பட வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் , பணிகள் அல்லது மூலதனப் பணிகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலகிரியாகம பொது நூலக வளாகத்தில் 2022 திசெம்பர் 31 அன்று சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் , ஆரம்பிக்கப்பட்ட ரூபா. 10,005,099 பெறுமதியயான விசாலமான நூலகக் கட்டிடத்தின் அரைவாசி பூரணப்படுத்தப்பட்ட நிலையில் கட்டுமானப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | வேலை பூரணப்படுத்தப்பட்டதும், வாசகர்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்படும். | நிர்மாண பணியை பூரணப்படுத்தி பாவனைக்குக் கொண்டுவரப்படல் வேண்டும் |

## 3.6 <u>மனித வள முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| .சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கையை உள்ளவாறான ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் 14 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 02 தொழிலாளர் பதவிகள் மற்றும் 01 சாரதி பதவி என்பன மிகையாகக் காணப்பட்டன | இது தொடர்பில் மாதாந்தம் உயர் முகாமைத்துவத்திற்கு தெளிவுபடுத்துவதாக | பதவியணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேலதிக ஊழியர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் |